பக்கங்கள் - 18

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 21 வியாழக்கிழமை 07.09.2023 அதிர்வு 37

## இலங்கை பற்றி புதிய அறிக்கை சமர்ப்பித்த ஐ.நா. ஆணையாளர்

இலங்கை தொடர்பான புதிய அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் 05



## முதுகில் செடில் குத்தி பத்து கடல் மைல் தூரம் படகை இழுத்து சாதனை

- எஸ்.நிதர்ஷன் -

முதுகில் செடில் குத்தி 10 கடல் மைல் தூரம் கடலில் படகை இழுத்து செல்வா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சாண்டோ வீரர் பிரமசிவன் விமலன் சாதனை படைத்துள்ளார்.

குடத்தனை வடக்கு, அன்னை வேளாங்கன்னி ஆலய திருநாளை முன்னிட்டு செல்வா விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் குறித்த படகு இழுத்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. 05





# எல்லாவற்றுக்கும் மிக விரைவில் பதில் கிடைக்கும்

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான "சனல் 4" வீடியோ பற்றிய கேள்விக்கு ஜனாதிபதி இப்படிக் கருத்து

**"எல்லாவற்றுக்கும் மிக விரைவில் பதில் கிடைக்கும். இதன் அர்த்தம் என்னவென்று என்னிடம் திரும்ப வினா தொடுக்க வேண்டாம்."**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 05



## திருமலையில் ரயிலில் பாய்ந்து தந்தையும் மகளும் உயிர்மாய்ப்பு



திருகோணமலையில் இருந்து கொழும்பு – கோட்டை நோக்கிச் சென்ற இரவு தபால் சேவை ரயிலின் மீது தந்தையும், மகளும் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 05



## தடை செய்த வார்த்தையை பயன்படுத்தவே வேண்டாம்

### முரளிக்கு மனோ எச்சரிக்கை

"நாட்டை, உலகை திரும்பிப் பார்க்க வைக்கும் மலையகத் தமிழன் என்று சொல்லுங்கள். 05



## அகழ்வுப் பணிகள் இன்றும் தொடரும்

### சட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

"முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் தொல்பொருள் பிரிவினரால் அளவீடுகள் 05

## மாலைவரை ஒன்றாகவே இருந்துவிட்டு இரவில் கழுத்தறுப்புச் செய்த மைத்திரி

### தயாசிறி கடும் கவலை

"நாடாளுமன்றத்தில் மாலை 4 மணிவரை நானும் கட்சித் தலைவரும் (மைத்திரிபால சிறிசேன) ஒன்றாகவே இருந்தோம். கலந்துரையாடலில் ஈடுபட்டோம். ஆனால், இரவில் என் கழுத்தை அறுப்பார் (பதவி நீக்கம்) 05





## இரகசியம்

கொஞ்சம் தாமதமாகிப் பத்துவதை "டியூப் லைட்" என் பார்கள். வயது போக போக எங்கள் ஞாபக சக்தியும் கொஞ்சம் தாமதித்துத்தான் பத்தும் போல.

இப்போது "சனல்-4" காணொலி மூலம் 07




# அதிர்வை ஏற்படுத்திய ‘சனல்-4’ காணொலி




இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்புலம் தொடர்பான ஆவணப் படம் ஒன்றை பிரித்தானியாவின் "சனல்-4" தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. இந்த காணொலி இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

"சனல்-4" ல்வெளியிட்டுள்ள ஆவணப் படத்திற்கு SRI LANKA'S EASTER BOMBINGS:DISPATCHES எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படம் 47 நிமிடங்களும் 09 செக்கன்களையும் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.



இந்த ஆவணப்படம், ஈஸ்டர் ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகள் மற்றும் தாக்குதல் காட்சிகளுடன் ஆரம்பமாகிறது.

பேராயர் மால்கம் கர்தினால் ரஞ்சித் மற்றும் பலரின் கருத்துக்கள் ஆவணப் படத்தில் இணைக்கப்பட்டுள்ளன.



"அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காகவும் நாட்டை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து கொள்வதற்காகவுமே இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன" என அந்த ஆவணப் படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளராக இருந்து தற்போது சுவிட்சர்லாந்தில் புகலிடம் கோரியுள்ளவரான ஆஸாத் மௌலானா பல்வேறு அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கையின் மூத்த புலனாய்வுத் தலைவர் ஒருவருக்கு தொடர்பு உள்ளதாக ஆஸாத் மௌலானா "சனல்-4" வின் ஆவணப் படத்துக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில் –

"இந்த தாக்குதல்கள் ஓரிரு நாட்களில் திட்டமிட்டு நடத்தப்பட்டதல்ல. இரண்டு மூன்று வருடங்களுக்கு மேல் முழுமையாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல் ஆகும்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் மறுக்க முடியாத ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவைக் கொல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ் கூறியுள்ளார்.



மதத் தீவிரவாதத்தில் ஈடுபட்ட சிறைச்சாலை கைதிகளை சந்தித்து பேச்சு நடத்துமாறு பிள்ளையான் என்னிடம் கூறினார்.

அதற்கமைய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த சஹாரான் ஹாஷிமின் சகோதரர் மௌலவி சைனி ஹாஷிமை நான் சந்தித்தேன்.

மௌலவி சைனி ஹாஷிம் எமக்கு மிகவும் பயன்படுவர் எனப் பிள்ளையான் என்னிடம் தெரிவித்தார்.

பிள்ளையானின் ஆலோசனையின்படி சட்டத்தரணி ஒருவரை நியமித்துசிறையில்இருந்தமௌலவிசைனி ஹாஷிமைபிணையில்எடுக்கும்முயற்சியில் ஈடுபட்டேன்.

(03ஆம் பக்கம் பார்க்க)



**அதிர்வை ஏற்படுத்திய...**

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் 2018 ஆம் ஆண்டு ஜனவரி, அந்தக் குழுவிற்கும் அரச புலனாய்வு சேவையின் தற்போதைய தலைவர் மேஜர் ஜெனரால் சுரேஷ் சலேக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு பிள்ளையான் எனக்குக் கட்டளையிட்டார்.

அதன் பின்பு கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சுரேஷ் சலேவுக்கும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சைனி ஹாஷிம் மௌலவிக்கும் இடையிலான கலந்துரையாடல் கரடிப்புவல் (Karadipuval) எனும் இடத்தில் தென்னந்தோப்பு ஒன்றில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலுக்கு சைனி ஹாசிம் மௌலவி உள்ளிட்ட ஆறு பேர் வெள்ளை வானில் அந்த இடத்திற்கு வருகை தந்தனர்.

இக்கலந்துரையாடலில் சுரேஷ் சலே, ராஜபக்ஷக்களுக்காக நாட்டில் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு அதுவே ஒரே வழி எனவும் சுரேஷ் சலே கூறினார்.



இந்தக் கலந்துரையாடலில் சஹாரான் ஹாஷிமின் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர் அன்றைய தினம் காலை எனக்கு சுரேஷ் சலேவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

தான் மட்டக்களப்பில் இருப்பதாகவும் என்னை உடனடியாக தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்குச் செல்லும்படியும் கூறினார்.

அங்கு நபர் ஒருவர் தங்கியிருக்கிறார் எனவும், அவரை உடனடியாக வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வெளியேறுமாறும் சுரேஷ் சலே என்னிடம் கூறினார்.

மேலும் அந்த நபர் விரும்பும் இடத்தில் இறக்கிவிடுமாறு என்னிடம் சுரேஷ் சலே கூறினார்.

நான் அவரை வாகனத்தில் ஏற்ற சென்ற வேளையில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது, அதனை தொடர்ந்து சிறிது நிமிடங்களில் அதாவது 8:50 மணியளவில் சஹ்ரானின் குழு உறுப்பினர் ஒருவருக்கும் தொலைபேசி அழைப்பு வந்தது.

பெரும்பாலும் நான் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றது சஹ்ரானின் குழு உறுப்பினர் ஒருவர் என நம்புகிறேன்.

(இந்த சீசிடிவி காட்சிகள் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் தாக்குதல் நடந்த அன்று “சனல்-4“ நிறுவனம் பெற்றுக்கொண்டதாக குறித்த ஆவண படத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தொலைபேசி அழைப்பு வந்த இரண்டு நிமிடங்களில், குறித்த நபர் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இருந்து தாக்குதல் நடத்தாமல் வெளியேறினார் என்று “சனல்-4“ இல் ஒளிபரப்பான சீசிடிவி காணொளிக் காட்சியில் பார்க்கக்கூடியதாக உள்ளது.)



தொடர்ந்து அம்பாறை – சாய்ந்தமருதில் சஹ்ரான் ஹாசிமின் சகோதரர் சைனி தற்கொலை செய்து கொண்டார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் நான் பிள்ளையானுடன் பேசினேன்.

என்னை வாயை மூடி மௌனமாக இருக்குமாறு அவர் எச்சரித்தார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னணியையும் அனைத்தும் உண்மைகளையும் தெரிந்த என்னை கொலை செய்து விடுவார்கள் என அஞ்சி நான் இலங்கையை விட்டு வெளியேறினேன” – என ஆஸாத் மௌலானா “சனல் -4“ ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டிலிருந்து தப்பிச் சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பது இதுவே, முதல் முறை என ஆஸாத் மௌலானா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆவண படத்தில் இலங்கையில் நடைபெற்ற யுத்தம் மற்றும் கடந்த 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றமை போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.



யுத்தத்தின் போது ராஜபக்ஷகளின் ஆட்சியின் கீழ் நடந்த பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் உள்ளடங்கிய காணொலிகளும் உள்ளன.

அத்துடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் நிலையத் தளபதி நிஷாந்த சில்வா, “சனல்-4“ இன் இந்த ஆவணப்படத்தில் தனது கருத்தையும் தெரிவித்துள்ளார்.

லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பில் தாம் நடத்திய விசாரணைகள் குறித்து நிஷாந்த சில்வா இந்த ஆவண படத்தில் தெரிவித்தார்.

இந்தக்கொலைச்சம்பவம்தொடர்பில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர்

(04ஆம் பக்கம் பார்க்க)





**அதிர்வை ஏற்படுத்திய...**

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷவைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைத்ததாக நிஷாந்த சில்வா கூறியுள்ளார்.



மேலும் தனது பெயர் மற்றும் அடையாளத்தை வெளியிட விரும்பாத அரச அதிகாரி அந்த ஆவண படத்தில் கூறியுள்ளதாவது:-

“சுரேஷ் சலே கோட்டாபய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகள் மற்றும் கைது நடவடிக்கைகளின் போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்தது.” – என்றார்.

எவ்வாறாயினும், உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னர் புலனாய்வு அமைப்புகள் இது குறித்து தவறான தகவல்களை வழங்கின என “சனல்-4“ ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு இருந்ததைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கண்டுபிடித்தது.

“சுரேஷ் சலே இந்த தாக்குதலின் பின்னணியில் இருந்து அதன் பொறிமுறையை இயக்கினார். அவர் இந்த தாக்குதல்களுக்கு உதவியாக இருந்தார்” என்று பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அரச அதிகாரி தெரிவித்துள்ளார்.



தன் மீதான இந்தக் குற்றசாட்டுகளை சுரேஷ் சலே திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பினருடன் தான் கலந்துரையாடலில் ஈடுபட்டார் எனக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது எனவும், அந்தச் சமயத்தில் தான் மலேசியாவில் இருந்தார் எனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது இந்தியாவில் இருந்தார் எனவும் சுரேஷ் சலே “சனல்- 4“ இற்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணப்படத்தின் உள்ளடக்கம் தொடர்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிள்ளையானும் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டனர் என “சனல்-4“ தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இந்திய உளவுத்துறை இரண்டு வாரங்களுக்கு முன்பு தகவல் வழங்கியதையும் இந்த ஆவணப்படம் மூலம் “சனல்-4“ நினைவுபடுத்தியுள்ளது.

தொடர்ந்து உயிர்த்தஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆவணப்படத்தில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் குறித்தும் உண்மைத்தன்மை முன்வைக்கப்படுகின்றது.





உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமாறு போப் பிரான்சிஸ் வலியுறுத்தும் காணொலியும் இதில் உள்ளடங்கியுள்ளது.

அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி கவிழ்ப்பும் நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் இந்த ஆவண படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவண படத்தின் நிறைவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் உண்மைத்தன்மையை இலங்கை நாடாளுமன்றத்தின் சிறப்புக் குழு விசாரணை நடத்தியதாக “சனல்-4” தெரிவித்துள்ளது.



# பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த அடைக்கலநாதன் எம்.பிக்குப் பிணை



- என்.புவியரசன் -

சுதந்திர தினத்தை அரசுக்கு எதிரான கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பேரணியில் பங்களித்தனர் எனப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் முன்னிலையாகாமைக்காகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. நேற்று மதியம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையான நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணியில் பங்களித்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட சில அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டது. அழைக்கப்பட்ட போது நீதிமன்றில் பிரசன்னமாகாமைக்காக செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்களுக்கு யாழ். நீதிவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்த ஊடாக மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். இதனை ஏற்றுக்கொண்ட மன்று ஆட்பிணையில் செல்வதற்குச் செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு அனுமதித்தது.

இந்த வழக்கில் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் யாழ் மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் பிணை ஒப்பமிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திருமலையில்...

திருகோணமலை, கந்தளாய் - பராக்கிரமாவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை - கந்தளாய் ரயில் நிலையத் தண்டவாளத்தின் அருகே தந்தையும், மகளும் நீண்ட நேரமாக நின்று கொண்டிருந்தனர் எனவும், ரயில் வந்ததும் தந்தையும், மகளும் ரயிலின் முன்னே குதித்தனர் எனவும் நேரில் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 38 வயதுடைய தந்தையும், 6 வயதுடைய மகளும் உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மகளுடன் உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி குவைத் நாட்டில் பணிப் பெண்ணாகப் பணியாற்றி வரும் நிலையில் அவர் வேறொரு நபருடன் தொடர்பில் இருக்கின்றார் என்று கேள்வியுற்ற கணவன் விரக்தியில் கடிதம் ஒன்றை எழுதி சட்டைப் பையில் வைத்துவிட்டு மகளுடன் தற்கொலை செய்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

### முதுகில் செடில்...

குடத்தனை வடக்கு கடற்கரையில் இருந்து சுப்பரமடம் கடற்கரை வரையான சுமார் 10 கடல் மைல் தூரத்துக்கு இவ்வாறு முதுகில் செடில் குத்தி படகு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

காலை 7:30 மணிக்கு ஆரம்பித்த சாகச நிகழ்வு 9:15 மணிக்கு நிறைவு பெற்றிருந்தது.

### அகழ்வுப் பணிகள்...

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அகழ்வுப் பணிகள் நாளையும் (இன்றும்) தொடரும்."

- இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மாலை நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

"கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் இன்று (நேற்று) உத்தியோகபூர்வமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

ஏற்கனவே தோண்டப்பட்ட புதைகுழியிலுள்ள மண் வெளியே எடுக்கப்பட்ட நிலையில் முக்கியமாக தொல்பொருள் பிரிவினரால் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணியானது நாளையும் (இன்றும்) தொடரும்.

இது சம்பந்தமான விவரங்கள் ஊடகங்களுக்குத் தினந்தோறும் அறியத் தரப்படும்." - என்றார்.

### எல்லாவற்றுக்கும்...

இலங்கையில் நல்லாட்சி அரசின் காலத்தில் - 2019ஆம் ஆண்டு 300 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் பிள்ளையான் என அழைக்கப்படும் தற்போதைய இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும், ராஜபக்‌ஷக்களும் இருந்தனர் என்று 'சனல் 4' வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நல்லாட்சி அரசின் காலத்தில் பிரதமராக இருந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதில் வழங்கினார்.

### தடைசெய்த...

தடை செய்யப்பட்ட வார்த்தைப் பிரயோகம் வேண்டாம்" - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனை நோக்கிக் கூறியுள்ளார்.

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கைச் சரிதம் என்ற அடிப்படையில் வெளிவர உள்ள முன்னோட்ட காணொலியில் இடம்பெறும் சர்ச்சைக்குரிய சொற்பிரயோகம் தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்நாட்டு இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் மத்தியில், தடை செய்யப்பட்ட வார்த்தையை உங்கள் பட முன்னோட்ட ட்ரேலரில் பயன்படுத்த வேண்டாம். அந்த வார்த்தையை நானே நேரடியாகத் தடை செய்து காட்டியுள்ளேன்.

கதையம்சத்துக்குத் தேவை என என்னிடம் கதைவிட வேண்டாம். நானே ஒரு கதாசிரியர். எனக்கு இது தெரியும்.

அந்த இடத்தில் "நாட்டைத் திரும்பிப் பார்க்க வைத்த மலையகத் தமிழன் என்று போடுங்கள். சரியாக வரும்." - என்று மனோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### மாலைவரை...

என நினைக்கவில்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கட்சி உறுப்புரிமையில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ள தயாசிறி ஜயசேகர எம்.பி. மேலும் கூறுகையில்,

"பொதுச்செயலாளர் பதவியை விட்டுக் கொடுக்குமாறு கட்சித் தலைவர் கோரி இருந்தால் அதனை செய்திருப்பேன்.

பொதுச்செயலாளர் பதவியில் இருந்து என்னை நீக்கியுள்ளமை சட்டவிரோத நடவடிக்கை. இதனை சட்டரீதியில் எதிர்கொள்வேன்.

கட்சிக்கு எதிராக நான் சதி செய்யவில்லை. தலைமைப் பதவியைக் கைப்பற்ற முற்படவும் இல்லை.

சு.கவிலிருந்து அரசு பக்கம் சென்றவர்கள்தான் சூழ்ச்சி செய்கின்றனர்." - என்றார்.

### இலங்கை பற்றி...

மனித உரிமைகள் தொடர்பான புதுப்பித்தல், ஆழமான நிறுவனச் சீர்திருத்தங்கள் மற்றும் உறுதியான முன்னேற்றத்துக்கான அவசர தேவைக்காகப் பாடுபடவும், வழங்கவும் இலங்கை அரசையும் இலங்கை அரசியல் கட்சிகளையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மேலாண்மை சிந்தனையின் விளைவு

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலுக்கான பழியை ராஜபக்ஷக்கள் மீது சுமத்துவதற்குக் கொதித்து நிற்கும் தென்னிலங்கை அரசியல் தரப்புகள் ஒரு விடயத்தில் மிகக் கவனமாகவும் தெளிவாகவும் இருக்கின்றார்கள். அது தொடர்பில் நுட்பமாக - நுணுக்கமாக - சொல்லாடல்களை பாவிக்கின்றார்கள்.

தமிழர் மீது ராஜபக்ஷக்கள் செய்த கொடூரத்தின் சாயல் கூட தங்களின் இந்தக் குற்றச்சாட்டு பட்டியலின் ஊடாக வெளிவந்து விடக்கூடாது என்பதில் அவர்கள் மிக சிரத்தையாக இருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் - ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் பற்றிய விவகாரத்தில் - சர்வதேச விசாரணையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவில் இருந்து கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வரை கேட்கின்றார்கள். ஏன் பெரிதும் குற்றச்சாட்டுக்கு இலக்காகி இருக்கும் பிள்ளையான் கூட சர்வதேச விசாரணையை வரவேற்கின்றார்.

என்ன காரணத்துக்காக சர்வதேச விசாரணையை சஜித் பிரேமதாஸவில் இருந்து கர்த்தினால் மல்கம் ரஞ்சித் வரை கேட்கின்றார்களோ அதே காரணத்துக்காகத் தான் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு தமிழர்களும் கோருகின்றார்கள் என்பதை தப்பி தவறியும் அவர்கள் வாய் திறந்து சொல்லுகின்றார்கள் இல்லை.

அது மட்டுமல்ல, இப்போது அவர்கள் குற்றம் சுமத்தும் ராஜபக்ஷக்கள் மீது, தமிழர்களும் கூட இதே பாணியில்தான் அவர்கள் தங்களது இனத்தை - உறவுகளை - கொன்றொழித்தார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள் என்ற கருத்தியல் வெளியே வராத மாதிரி 'கவர்' பண்ணித்தான் அவர்களின் குற்றச்சாட்டுக் குரல் ஒலிக்கிறது.

அரசியலில் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்காகவே அப்பாவி பொதுமக்களைக் கூட பெரும் எண்ணிக்கையில் கொல்லும் இழி செயலுக்கு தூண்டில் போடக் கூடியவர்கள் என்று இன்று அவர்களால் குற்றம் சுமத்தப்படுபவர்கள், அன்று அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக - அதிகாரத்தை வைத்துக்கொண்டு - மாற்று இன மக்களை கொன்றொழித்தார்கள் என்ற உண்மையைப் பேச - குறைந்தபட்சம் அந்த அடிப்படையிலான சந்தேகத்தை கிளப்பக் கூட - கர்தினால் மற்றும் சஜித் போன்றோருக்கு துணிச்சல் இல்லை. ஏனெனில் அதற்கும் காரணம் அவர்கள் சிக்குண்டிருக்கும் சிங்கள பேரினவாத மனவமைப்புத்தான்.

யுத்த காலத்தில் படைத் தரப்பால் கொன்றொழிக்கப்பட்ட பத்திரிகையாளர்களில் அநேகர் தமிழர்கள். நிமலராஜன், தராக்கி சிவராம், நடேசன், சுகிர்தராஜன் என்று அந்தப் பட்டியல் மிகவும் நீண்டது. ஆனால் கொன்றொழிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் விடயத்தில் கூட அப்படிக் கொல்லப்பட்ட ஓரிரு சிங்களவர்களான பத்திரிகையாளர்களில் ஒருவரான லசந்த விக்ரமதுங்க என்ற பத்திரிகையாளர் விடயத்தைத்தான் இப்போது தூக்கிப் பிடித்து பேசுகின்றனர் சஜித் உட்பட தென்னிலைத் தலைவர்கள்.

இப்போது "ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதல் குறித்து சுதந்திரமான, பாரபட்சமற்ற, நீதியான, வெளிப்படையான மற்றும் பரந்த விசாரணை ஒரு சுயாதீனமான சர்வதேச குழுவால் நடத்தப்பட வேண்டும்' என்று வலியுறுத்தும் கர்த்தினால் மல்கம் ரஞ்சித், இந்தத் தொடர் குண்டுத் தாக்குதலின் பேரழிவை விட பல நூறு மடங்கு மோசமான பேரழிவைத் தமிழர்கள் மீது நடத்திய இனவழிப்பு யுத்தம் குறித்து அத்தகைய விசாரணைக்கு அழைப்பு விடாமல் - அல்லது அத்தகைய அழைப்புக்கு ஆதரவு தராமல் - இன்னமும் மௌனம் பேணுவது ஏன்?

எல்லாம் சிங்களம் என்ற மேலாண்மை சிந்தனையில் மூழ்கி கிடப்பதுதான் காரணம்.



## லசந்தவின் கொலைக்கு ஏன் நீதி நிலைநாட்டப்படவில்லை?

### ரணிலிடம் சஜித் கேள்வி




"தற்போதைய ஜனாதிபதியின் அரசியல் பயணத்தில் பெரும் பக்கபலமாக இருந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளுக்கு என்ன நடந்தது? இதன் பின்னணியில் உள்ள நபர்கள் மற்றும் குழுக்களை அம்பலப்படுத்துவீர்களா? இல்லையா?"

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

"லசந்த விக்கிரமதுங்கவைக் கொன்ற கொலையாளிகள் நாடாளுமன்றத்தில் இருந்தால் அந்த நபர்களின் பெயர்களை வெளிப்படுத்த வேண்டும். இது தொடர்பாக கேள்வி எழுப்ப நாம் ஒருபோதும் பயப்படவில்லை. இந்த விடயத்தில் உரிய நீதி கிட்ட வேண்டும்." – என்றார்.

## புதிதாக 45 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்ப்பு



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூற்றுப்படி, 2022/23 கல்வியாண்டில் பல்கலைக்கழக கல்விக்காக 45 ஆயிரம் மாணவர்கள் புதிதாகப் பதிவு செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்டம்பர் 14ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், விண்ணப்பக் கையேட்டை அங்கீகரிக்கப்பட்ட புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**இரகசியம் பரகசியம்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரபரப்பாகப் பேசப்படும் ஆஸாத் மௌலானாவின் வாக்குமூலத்தை சில காலத்துக்கு முன்னர் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு மூத்த சட்டத்தரணி எனக்கு அனுப்பினார் என்றும், அதில் இருந்த விடயங்களின் உணவுபூர்வமான தன்மை மற்றும் போதிய ஆதாரங்களின்மை ஆகியவற்றின் அடிப்படையில் அவ்விவரங்களை என் ஊடகத்தில் செய்தியாகப் பிரசிரிக்க நான் பின்னடித்து விட்டேன் என்றும் இப்பத்தியில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அந்த வாக்குமூலத்தை தேடி எடுத்து விட்டேன். இனி மிச்சப் பகுதியும் பிந்தி நினைவுக்கு வந்தமையால் (டியூப் லைட் போன்று தாமதித்துப் பத்தியமையால்) இப்போது இன்று குறிப்பிடுகிறேன்.

அந்த வாக்குமூலப் பிரதியை எனக்கு அனுப்பியவர் சிரேஷ்ட சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன். ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமை போராட்டத்துடன் நெருக்கமாக செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.

அவர் அப்போது நான் ஆசிரியராக இருந்த "காலைக்கதிர்" நாளேட்டில் தமிழர் அரசியல், மனித உரிமை விடயங்கள், யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலை, இனவழிப்பு போன்ற விடயங்களை ஒட்டித் தொடர் கட்டுரைகளை வரைந்து வந்தவர். என் நினைவு சரி என்றால் மூன்று, நான்கு கட்டுரைத் தொடர்களை மொத்தம் 500 அத்தியாயங்களுக்கு மேல் தொடராக நமது பத்திரிகையில் வரைந்தவர்.

கடைசித்தொடர் "யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!" என்றதலைப்பில்சுமார்300அத்தியாயங்கள்–10மாதங்கள் வரை – நாள் தவறாமல் வந்தன.

இவ்வாண்டு ஜனவரி முற்பகுதியில் – பொங்கலுக்கு சில நாள்களுக்கு முன்னர் – அந்த வாக்குமூலத்தின் பிரதியை எனக்கு அனுப்பி இருந்தார். நான் அதனைப் பிரசுரிக்க பின்னடித்ததும், அவர் துணிச்சலுடன் அதன் சாராம்சங்களைத் தனது கட்டுரையில் சேர்த்துக் கொண்டார். நானும் அவற்றைப் பிரசுரித்தேன். இந்த விடயங்களை எழுதியமைக்காக அவருக்கு பின்னர் சில அழுத்தங்கள் பல பக்கங்களில் இருந்தும் வந்தமையையும் அவர் கூறியிருந்தார். எனினும் எனது பணி இந்த ஆண்டு பெப்ரவரி நடுப்பகுதியில் காலைக்கதிரில் முடிவுக்கு வந்து, ஓரிரு வாரங்களில் அவரது கட்டுரைத் தொடரும் முடிவுக்கு வர, நான் அவர் மீதான அழுத்தம் பற்றிய விடயங்களையும் மறந்து போனேன்.

"ஆஸாத் மௌலானா ஜெனிவா மனித உரிமை சபையின் முன் தொடர்ந்து ஐந்து நாள்கள் விசாரணையின் போது கூறிய ஒப்புதல் வாக்குமூலம்" என்ற பெயரில் 30-12-2022 திகதியில் இந்தப் பதிவு "வாக்குமூலத்தின் முதல் பாகம்" என்று 25 பக்கங்களில் வந்திருந்தது.

அதன் அடிப்படையில் அதைக் கட்டுரைத் தோடரில் ரவீந்திரன் கூறிய தகவல்களை அப்படியே ஆங்காங்கே வெட்டி எடுத்து இங்கு தருகிறேன்.

ரவீந்திரனின் கட்டுரை மற்றும் அவருடன் பேசிய என் நினைவுகளின்படி–

இந்தஆஸாத்மௌலானாவின்தந்தையார் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் முன்னாள் போராளி. அந்த அமைப்பின் தலைவர் பத்மநாபா புலிகளின் தாக்குதலில் இந்தியாவில் கொல்லப்பட்ட போது அவருடன் உயிரிழந்தவர். மகன் ஆஸாத் மௌலானா பட்டதாரியாகும் வரை கல்விக்கும் பிற விடயங்களுக்கும் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தோழர்களே பல வகைகளிலும் உதவினர்.

சிங்களம்,ஆங்கிலம்தெரியாதகருணாவுக்கும் பிள்ளையானுக்கும் அவ்விடயத்தில் உதவுவதற்காக அவர்களிடம் ஆஸாத் மௌலானவைக் கூட்டிச் சென்று அறிமுகப்படுத்தியவர் முன்னர் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தளபதியாகவிருந்த டக்ளஸ் தேவானந்தாதான்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட கட்டுரையாளர் சட்டத்தரணி ரவீந்திரன் மீது மிகுந்த நம்பிக்கை,மரியாதை கொண்டவர். இளம் விடுதலைப் போராளி டக்ளஸுடனும் முன்னர் நெருங்கிப் பழகிச் செயற்பட்டவர் ரவீந்திரன் என்பது ஒரு காரணம். டக்ளஸின் ஞானத் தந்தையார் கே.ஸி.நித்யானந்தாவும் ரவீந்திரனும் நெருங்கிச் செயற்பட்டவர்கள். இருவரும் சேர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை ஸ்தாபித்து இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்ல, புலிகளின் தலைவர் பிரபாகரன், புளொட் தலைவர் உமா மகேஸ்வரன் போன்றோர் கூட இளம் பராயத்திலேயே சட்டத்தரணி ரவீந்திரனை மதித்து, அவரது வழிகாட்டலில் செயல்பட்டார்கள். அது குறித்து பிறிதொரு சமயத்தில் விவரிக்கிறேன்.

இனி ரவீந்திரன் தனது கட்டுரையில் ஆஸாத் மௌலானா பற்றி கடந்த ஜனவரி இறுதியில் – எட்டு மாதங்களுக்கு முன்னர் – குறிப்பிட்டவற்றை இனிப் பார்ப்போம். அவை வருமாறு:–

...அதே போல் கருணா விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்தோ, அல்லது யாராலோ பிரிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பிற்காக வந்த போது, ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா கருணாவை அரசியல் கட்சி ஒன்றைப் பதிந்து அரசியல் செய்ய அனுமதிக்கவில்லை. ஆனால் இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களுக்காக அவரைப் பிழிந்து எடுத்தார்கள்.

பின்னர் மஹிந்த ஜனாதிபதியானதும்தான் கருணாவை அரசியலுக்கு அனுமதித்தார். இராணுவ ரீதியிலும் பயன்படுத்தினார்.

அவர்கள் அரசியலில் தடம் பதிக்க முற்பட்டபோது காட்டில் ஆயுதங்களுடனேயே பழகிப்போன இவர்களை நாட்டுக்குள் குடிமக்களுடன் உள்ளிருத்தி இணைந்து அரசியல் செய்ய உதவியவர் டக்லஸ்தான்.

அவர்தான்(டக்ளஸ்தான்) முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அங்கத்தினரும் பத்மநாபாவுடன் 19 ஜுன் 1990 இல் விடுதலைப் புலிகளால் தமிழ் நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டவருமான மொஹமட் அலியாஸ் மொஹமட் மிகிலார் என்பவரின் பட்டதாரி மகனும், பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருந்தவருமான ஆஸாத் மௌலானாவை, கருணா, பிள்ளையான், குகநேசன் போன்றோருக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் ஒன்றாக இருந்ததனால் கருணாவினது 'தமிழ் அலை' என்ற பத்திரிகையும் நடத்தி ஆஸாத் மௌலானா அவர்களது அரசியல் ஆசானாகவும் பங்காற்றினார்.

கருணா, பிள்ளையான் இருவருமே அதிகமாகப் படிக்கவில்லை. பிள்ளையான் சிறு பராயத்திலேயே இயக்கத்தில் சேர்ந்தவர். இருவருக்குமே ஆங்கிலத் தேர்ச்சி, அரசியலை சர்வதேச பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இருக்கவில்லை. அவற்றுக்குத் துணையாக இருந்து, அந்த முக்கியமான கால கட்டங்களில் அவர்களுடன் பயணித்த ஆஸாத் மௌலானா, தற்சமயம் ஈஸ்டர் குண்டு தாக்குதல்களில் இராணுவத்துடன் எழுந்த முரண்பாடுகளால், ஐரோப்பாவின் ஒரு தலைநகரில் அரசியல் தஞ்சத்தில் வாழ்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவரால் அந்தக் காலகட்டம் பற்றி மனித உரிமைச் சபைக்குத் தரப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என இணையப் பதிவு ஒன்று செய்யப்பட்டது, அதன் பிரதி ஒன்றும் பெற்றேன்.

அதனைப் பற்றிய ஆதங்கங்களையும், அவற்றிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய எதிராளிகளின் நகர்வுகளையும் தொடர்ந்து பார்க்கலாம்.

...லஸந்த விக்கிரமதுங்கவின் கொலையையும் மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் (Permanent People's' Tribunal) விசாரித்த போது, இந்தக் கொலை திட்டமிட்டு, அரசின் உதவிகளோடு, இராணுவத்தின் துணை படைகளால் நடத்தப்பட்டது என அதன் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களில் இருந்து அபிப்பிராயப்பட்டது.

பிள்ளையானின் காரியதரிசி ஆஸாத் மௌலானாவின் சாட்சியமானது லஸந்த விக்ரமதுங்கவின் கொலை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டது என்றும், அது மாத்திரமல்ல இன்னும் எவ்வளவோ அரசுக்காக செய்யப்பட்டவைகளில் பிரதானமாக தமிழ்நெற் சிவராம், மட்டக்களப்பு வீரகேசரி செய்தியாளர் நடேசன், திருகோணமலை

(08ஆம் பக்கம் பார்க்க)

**இரகசியம் பரகசியம்...**

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரஜைகள் குழுவின் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், கிழக்கு மாகாண பல்கலைக்கழக விரிவுரையாளர் ரவீந்திரநாத், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட போன்றவர்களைக் குறிப்பிட்டு இவர்களெல்லாம் புலனாய்வு பிரிவால் குறி வைக்கப்பட்டு, உளவுப் படைகளால் புறச் சூழல்கள் ஏற்படுத்தப்பட, கருணா, பிள்ளையான் அணிகள் முடித்த காரியங்கள் என்றும் கூறுகின்றது.

2004 இல் இருந்து 2010 வரை நாட்டில் 44 ஊடகவியலாளர்களும் ஊடகங்களோடு தொடர்புகள் வைத்திருந்தோரும் சட்டத்துக்கு விரோதமான முறைகளில் கொல்லப்பட்டார்கள். அவர்களில் 35 பேர் தமிழர்கள். அவற்றைச் செய்தவர்களோ அன்றில் இராணுவப் பகுதிகளுக்கு உடந்தையாக இருந்தவர்களோ விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலை புலிகள் போன்றோர்தான்.

இவ்வளவு ஊடகவியலாளர்கள் அழிக்கப்படும் போது தமிழ் மக்களும் அவர்களது ஊடகங்களும் இவை இனம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்டவை எனப் பதிந்தும், எண்ணத்தை வளர்த்தும், சவர்க்காரத் தண்ணீரில் கை கழுவி, இயேசுவிற்கு தண்டனை சொன்ன பிலாத்து மன்னனை போல வாளாவிருந்தமை, இந்தக் கலாச்சாரத்தை வளர்ப்பதில் அதில் அவர்கள் (ஊடகங்கள்) பங்கு பெரிது என அடிக்கடி சொல்லிக் காட்டினேன். இவை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஏதாவது வளம் தந்தனவா?

மேலும் ஆஸாத் மௌலானா தனது சாட்சியத்தில் 1987இல் இந்தியப் படையுடன் விடுதலைப் புலிகளின் போராட்டம் வெடித்த போது பிரேமதாஸாவின் ஒத்தாசையோடு விடுதலைப் புலிகள் அமைப்பு தலைநகரில் இராணுவ புலனாய்வு பிரிவின் திட்டங்களோடு சேர்ந்து தமது சொந்த செலவினங்களுக்காக ஆள்களைக் கடத்திப் பணம் பறிக்கும் வழக்கம் இருந்தது, வெள்ளைவான் கடத்தலை விடுதலைப் புலிகளே தொடக்கி வைத்தனர், பின்னர் அவர்களிடமிருந்து பிரிந்த போது கருணா, பிள்ளையான் அதைத் தத்தெடுத்து கொண்டனர் எனக் கூறுகிறார்.

**சாட்சிய பதிவுகள்**

ஆஸாத் மௌலானாவின் சாட்சியமாக பதியப்பட்ட விடயம் மனித உரிமை மன்றின் கட்டமைப்புகளுக்கு ஐந்து நாள்கள் தரப்பட்டவை.

விடுதலைப் புலிகளில் இருந்து கருணா பிரிந்த காலம் தொட்டு, பின்னர் கருணா பிள்ளையானது பிரிவு, கருணாவைப் புறந்தள்ளி, மஹிந்த அரசு பிள்ளையானை நம்பிக்கையானவராக வளர்த்து மாகாண முதலமைச்சராக்கியது, ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை, நல்லாட்சி காலத்தில் பிள்ளையானும் உளவாளிகளும் பிணையில்லாத நிலையில் அந்தச் சம்பவங்களுக்காக சிறையில் இருந்தது, வழக்கிலிருந்து விடுதலை பெற தேடிய ஆதரவுகள், மஹிந்த, பஸில் சிறையில் சந்தித்தது, தேர்தலில் வெற்றி பெற்றது, கோட்டாபய ஜனாதிபதியாக வந்தால்தான் வழக்கிலிருந்து வெற்றி பெற்று வெளியே வர வழி பிறக்கும் என்று பேச்சுக்களில் இராணுவப் புலனாய்வுத் திட்டங்களுக்கு இணங்கி ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு பயிற்சி அளித்தது, அதன் நடப்புகளுக்காக இராணுவப் பகுதிகளோடு இயங்கியது, இந்தியாவின் உளவுப் படையினரோடான தொடர்புகள், வெளிநாட்டுப் பிரயாணங்கள், அவற்றின் நோக்கங்கள் என இன்று வரையான திகில் நிறைந்த சம்பவங்களை இந்தச் சாட்சியம் கூறியது.

...ஐ.நாவில் இயங்கும் நண்பர்களோடு தொடர்பு கொண்ட போது இப்படியான சாட்சியம் மனித உரிமைகள் சபைக்கோ, அதன் கட்டமைப்புகளுக்கோ, நேரடியாக தரப்பட்டிருப்பின், அதன் பிரதிகளைப் பெறுவது முடியாது, ஆனால் அரசு சார்பற்ற நிறுவனம், சர்வதேச மன்னிப்பு சபை போன்றவை அதை நெறிப்படுத்தியிருந்தால் அவர்களிடமிருந்து பிரதிகளை பெற வாய்ப்பு உண்டு. ஆனால் இதுவரை அப்படியான தகவல்கள் இல்லை என்கிறார்கள்.

சில சமயங்கள் அரசாங்கமும் அதன் இராணுவப் புலனாய்வுகளும் தங்களுக்கு எதிராக இருக்கும் முக்கியமான குற்றச்சாட்டுகளைத் திசை திருப்பி விட இப்படியான சிலரையும் அவர்களது வாக்குமூலங்களையும் குழப்பங்களுக்காக இறக்கி விடுவது உண்டு.

லஸந்தவின் கொலையில் அரசாங்கத்துக்கு தொடர்புண்டு, அரசாங்கம், பாதுகாப்போ அல்லது முழுமையான விசாரணைகளோ நடத்தவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் அவர்கள் இராணுவப் புலனாய்வு பகுதிகளின் ஆவணங்களை மறைத்து, இது தமிழ் மக்கள் விடுதலை புலிகளால் செய்யப்பட்டது, அவர்களது சாட்சியமே தாங்கள் நடத்தியதாக ஒப்புக் கொள்கிறார்கள் என விசாரணைகளில் கூறலாம். முக்கியமாக ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், பல பரிமாணங்கள் எடுக்க, இப்படியான சாட்சியங்கள் புறப்பட வழிகள் உண்டு என்ற எண்ணமும் எழுந்தது. ஆகவே அதனை சிறிது ஆற போட்டிருந்தேன்.

கத்தோலிக்க திருச்சபையின் கேள்விகள், ஈஸ்டர் குண்டு தாக்குதல் பற்றிய விசாரணையின் அறிக்கை மைத்திரியும், பாதுகாப்பு அதிகாரிகளும் விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தது. மைத்திரிக்கு எதிரான உயர் நீதிமன்ற தீர்ப்பின் சரத்துக்கள், கோட்டாபய தான் வெற்றி பெறுவதற்காகவே இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தினார் என நாடாளுமன்றத்திலும் வெளியேயும் பேசப்படுவது, ஆஸாத் மௌலானாவின் சாட்சியங்கள் எல்லாவற்றையும் உறுதிப்படுத்தா விட்டாலும் தமிழ் மக்களுக்கு விழிப்பு தரும் என எண்ணுவதால் மேலும் சிலவற்றை அதிலிருந்து நாளை பகிர்ந்து கொள்கிறேன்.

– என்று ரவீந்திரன் தமது கட்டுரைத் தொடரில் குறிப்பிடுகிறார். மேலும் அக் கட்டுரையில் இருக்கும் விவரங்கள் தற்போதைய சர்ச்சைகளின் எதிர்வு கூறல்களாக அமைந்தால் அவற்றையும் வாசகர்களுடன் தொடர்ந்து பகிர முயற்சிப்பேன்.

# அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம்

## கொலையெனச் சந்தேகம்




நிகவெரட்டிய நகர் பகுதியை அண்மித்த நெல் வயல் ஒன்றின் நடுவில் இருந்து நிர்வாணமான நிலையில், சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று நிகவெரட்டிய தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 40 – 45 மதிக்கத்தக்க வயதுடைய ஆணின் சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் யாருடையது என்பது பற்றி இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

அந்தச் சடலம் வெளிப் பிரதேசத்தில் இருந்து கொலை செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டு அந்த நெல் வயலுக்குள் போடப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் நிகவெரட்டிய பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் சிதைந்த காணப்படுகின்றது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.



# 3 மாத காலப்பகுதிக்குள் மட்டும் 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்

கடந்த 3 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மேலும், இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களின் போது 22 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

குற்றவாளிகள் தொடர்பில் சரியான தரவு முறைமை இன்மையே குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம் எனவும், எதிர்வரும் 3 மாதங்களுக்குள் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படும் எனவும் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸாரின் வகிபாகம் எனும் தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

குற்றவாளிகள் தொடர்பில் சரியான தரவு முறைமை இன்மையே இந்த நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம். கடந்த 10 வருடங்களில் நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரின் முழுமையான விவரங்களைக் கொண்ட தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.



ஆனால், அவற்றில் குறைபாடுகள் உள்ளன. இதன் காரணமாகவே குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தரப்பினர் சட்டத்திடமிருந்தும், பொலிஸாரிடமிருந்தும் தப்பித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் தலைமறைவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் கடந்த 3 மாதங்களுக்குள் 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன் போது 22 பேர் உயிரிழந்துள்ளனர். 17 பேர் காயமடைந்துள்ளனர். இவற்றுள் மேல்மாகாணத்தில் மாத்திரம் 16 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், தென் மாகாணத்தில் 10 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. 9 துப்பாக்கிதாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அல்லது மடக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மடக்கப்பட்ட 9 பேரில் இருவர் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தபோது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இரு பாதாள குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட இந்தப் பாதாளக் குழுக்களுக்கு இடையில் போதைப்பொருள் சம்பந்தமான தகராறுகள், தனிப்பட்ட குரோதங்கள் காரணமாக பழிவாங்கும் நோக்கில் இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு பழிவாங்கும் நோக்கில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 14 துப்பாக்கி பிரயோகங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவும், சந்தேக நபர்களை கைது செய்யவும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். வெளிநாட்டில் இருந்துகொண்டு நாட்டில் பாதாள குழுக்களை செயற்படுத்தும் தரப்பினர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்து சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் ஒருவர் பொலிஸாரின் பிடியிலிருந்து நீண்ட காலத்துக்கு மறைந்து வாழ முடியாது. நிச்சயம் கைது செய்யப்படுவார். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தக்க தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# அவசர மருந்து கொள்வனவில் மோசடி: விமல் வீரவன்ஸ சபையில் குற்றச்சாட்டு



சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம் எனவும் அவசர மருந்துக் கொள்வனவு ஊடாக பாரிய நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அவசர மருந்துக் கொள்வனவு தொடர்பான மோசடியில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் உறவினர்கள் ஈடுபடுகிறார்கள். இதுவே உண்மை.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை பதவி விலக்கியதன் பின்னர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாகம் 2 வருகை தரும். ஆகவே உண்மையான பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை சுகாதாரத்துறையின் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத்தின் சம்பிரதாயங்கள் முழுமையாக மீறப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி செயற்படுகிறார்.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் வகையில் சட்டமூலத்தை இந்த வாரத்துக்குள் நிறைவேற்றித் தருமாறு ஜனாதிபதி சபாநாயகரை நோக்கி குறிப்பிடுகிறார். இவ்வாறான நிலையே தற்போது காணப்படுகிறது.

பொருளாதாரப் பாதிப்பு தொடரும் வரை சுகாதார துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடரும். நாட்டு மக்கள் உணவு என்று குறிப்பிட்டுக்கொண்டு விஷத்தை உட்கொள்கிறார்கள்.

உணவு தரப்படுத்தல் நிறுவகம் சகல உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்தும் கப்பம் பெறுகிறது. நிறுவனங்களுக்கு ஏற்றாற்போல தரப்படுத்தல் செய்து அறிக்கை சமர்ப்பிக்கிறது.

நாட்டு மக்களுக்கு தரமான உணவை வழங்கினால் சுகாதாரத்துறையில் தோற்றம் பெற்றுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்று தெரிவித்துள்ளார்.

# தேசியப் புலனாய்வுப் பிரிவு இயக்குநர் சலேயை உடன் பதவி நீக்கி விசாரணையை நடத்துங்கள்

## ஜே.வி.பியின் பிரமுகர் கோரிக்கை



தேசியப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் சுரேஷ் சலேயை உடனடியாக பதவி நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள தேசிய மக்கள் சக்தி, பிள்ளையானிற்கு எதிராக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே தேசிய மக்கள் சக்தி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தேசியப் புலனாய்வு பிரிவின் இயக்குநராக சுரேஷ் சலே தொடர்ந்தும் பணியாற்றும் சந்தர்ப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வது அர்த்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சனல் 4 வீடியோவில் மௌலானா தெரிவித்துள்ளமை போல உயிர்த்த ஞாயிறு தாக்குததலில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வர் பிள்ளையானிற்கும் சுரேஷ் சலேயிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அவர்கள் கோட்டாபயவுடன் காணப்படும் படங்கள் உள்ளன. பிள்ளையானுக்கு உள்ள தொடர்பை மௌலானவே வெளிப்படுத்தியுள்ளார். - எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

உண்மையான குற்றவாளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகின்றனர். விசாரணைகள் உரிய கோணத்தில் இடம்பெறவில்லை. தற்போது வெளிவந்துள்ள விடயங்கள் சூத்திரதாரிகள் மற்றும் நோக்கங்களை வெளிப்படுத்தியுள்ளன - எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்ற உடன் சுரேஷ் சலே புலனாய்வு பிரிவின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கும் தொடர்பிருக்கவேண்டும் எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தற்போது ஜனாதிபதியில்லை. அவருக்கு சட்ட விலக்குரிமை இல்லை என்பதால் அவர் குறித்த விசாரணைகளை மீள ஆரம்பிக்கவேண்டும்.- எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதான சூத்திரதாரிகள் அரசில் இருப்பதனால்தானா பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமல் உள்ளது?

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் எனக் கூறி இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி தேசிய ஒற்றுமையைச் சிதைத்து ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மை வெளிவராமல், நியாயமான, பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படாமல் இருப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் அரசில் இருப்பதால்தானா? என்ற பிரச்சினை ஏற்படுகின்றது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பாரபட்சமற்ற மற்றும் நியாயமான விசாரணை நம் நாட்டில் நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் பலமுறை கோரிக்கை விடுத்தோம். அந்தக் கொடூரத் தாக்குதலால் பல உயிர்கள் பலியாகியுள்ளன. இந்தக் காட்டு மிராண்டித்தனமான – கொடூரமான வன்முறைத் தாக்குதலை அன்றும், இன்றும், நாளையும் நாமும் முழு மக்களும் வன்மையாகக் கண்டிக் கின்றோம்.

தற்போது நமது நாட்டில் இந்தக் காட்டுமிராண்டித்தனமான பயங்கர



வாதத் தாக்குதல் குறித்து நியாயமான தேசிய விசாரணை நடைபெறவில்லை என்பதைப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்தத் தாக்குதலில் உயிரிழந்த நம் நாட்டு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

தற்போதைய அரசு கூட நியாயமான விசாரணை நடத்தப்படும் என்ற வாக்குறுதியை அளித்துதான் நிறுவப் பட்டது.

இன்று தேசிய மட்டத்திலான விசாரணை முன்னெடுக்கப்படாததால் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதற்காக உருவான அரசு இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தால் அதன் உண்மைத்தன்மையை அறிய வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அனைத்து விசாரணைகளும் தற்போது மறைக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் அடிப்படையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மதவாத மற்றும் இனவாத தாக்குதல்களை நாம் மறக்க முடியாது. இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி தேசிய ஒருமைப்பாட்டைக் காட்டி அமைச்சுப் பதவிகளைப் பெற்றவர்களினால் பிரதான சூத்திரதாரிகளாகச் செயற்பட்டவர்களை வெளிப்படுத்தத் தவறிவிட்டனர். இது தொடர்பில் உண்மையைக் கண்டறிய அரசுக்கு முதுகெலும்பில்லை என்றாலும் சர்வதேச சமூகம் இந்த உண்மையை வெளிப்படுத்தி வரு கின்றது.

இது தொடர்பாக வெளிப்படையான விசாரணை தேவை. இது தொடர்பாக தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்றும் பேசப்படுகின்றது. இது திருடனின் தாயாரிடம் மை பார்ப்பது போன்றாகும்.

இந்த இரத்த வெறி கொண்ட அரசால் உண்மையை வெளிக்கொண்டு வர முடியாது என்பதால் நியாயமான சர்வதேச விசாரணை அவசியம்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்புடன் நியாயமான விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படும்." – என்றார்.

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

மழையுடனான வானிலையுடன் நீர் மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் சற்று உயர்வடைந்துள்ளது என மின்சார சபை தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்துள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 26.8 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் நாளாந்த மின் உற்பத்தியில் நீர் மின் உற்பத்தி 26 வீதத்தினால் அதிகரித்துள்ளது என்றும் மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மவுசாகலை மற்றும் கொத்மலை நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 41 வீதமாக அதிகரித்துள்ளது.

0.9 வீதமாக காணப்பட்ட சமனல வாவியின் கொள்ளளவு 4.6 வீதமாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சமனல வாவியின் நீர் வெளியேறும் பகுதிகளை மூடும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற் பட்டுள்ளது.

இந்த நிலையில், கூடியளவில் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மின்சார சபை தெரிவித்துள்ளது.

# போலி வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்த மூவர் வசமாகச் சிக்கினர்

போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் தம்பதியரும் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துபாயில் தொழில் வழங்குவதாக ஒருவரிடம் இருந்து தலா 7 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டு வாக்குறுதியளித்தபடி, தொழில் வழங்கவில்லை என இருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குருநாகல் பிரதேசத்தில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்று சோதனையிடப்பட்டுள்ளது.

இதன்போது, பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தியமை மற்றும் வெளிநாட்டு வேலைகளுக்கு ஆசேர்ப்பு செய்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் கணவனையும் மனைவியையும் அவர்களது உறவினர் ஒருவரையும் அதிகாரிகள் அங்கு கைது செய்தனர்.

இந்தச் சோதனையின்போது, அதிகாரிகள் 4 கடவுச் சீட்டுக்கள் மற்றும் வெளிநாட்டு தொழில் வழங்குவது தொடர்பான பல ஆவணங்களையும் கண்டு பிடித்தனர்.

# காட்டு யானையின் தாக்குதலில் சிறுவன் காயம்


பண்டாரவளை – கொஸ்லந்த – பூனாகலை – அம்பிட்டிகந்த பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுவன் ஒருவன் காட்டு யானை தாக்கி காயமடைந்துள்ளான்.

தனது தந்தையுடன் நேற்றிரவு சென்று கொண்டிருந்த போது அவன் யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளான்.

அந்தச் சிறுவன் தற்போது பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஏப்ரல் 21 தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# நியாயம் கிடைக்காது என்கிறார் நாமல் ராஜபக்ஷ



ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் விசாரணைகள் அரசியலுக்காக பயன்படுத்தப்படும் வரை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைப்பது சாத்தியமற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்காகவே ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற தவறான தொரு நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். நாங்கள் கொள்கை அடிப்படையில் செயற்படுகிறோமே தவிர சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவில்லை.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை பொதுஜன பெரமுன தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றது.

பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது. குண்டுத்தாக்குதலில் ஈடுபட்ட ஒரு தற்கொலை குண்டுதாரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார மேடையில் கலந்துகொண்டார்.

பிரதான குண்டுதாரி ஒருவரின் தந்தை மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகவும் இருந்தார். அவ்வாறாயின் இவர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்று குறிப்பிட வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. 720 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு, 70 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேசிய மட்டத்துக்கு அப்பாற்பட்டு அமெரிக்காவிலும் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குண்டுத்தாக்குல் சம்பவம் மற்றும் விசாரணைகள் தற்போது தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. ஆகவே அரசியல் நோக்கத்துக்காக இவ்விடயம் பயன்படுத்திக் கொள்ளப்படும் வரை குண்டுத்தாக்குதலின் உண்மை சூத்திரதாரியை கண்டு பிடிப்பதும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைப்பதும் சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.09.2023


மேஷம்

இன்று செய்ய வேண்டிய காரியங்களை எதிர்கொள்வது கடினமாக இருக்கும். உங்கள் பொறுமையை இழக்க நேரிடலாம். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் உறுதியும் அவசியம்.

இன்று பணிகள் சுமுகமாக நடப்பதற்கு சாத்தியமான நாளாக அமையாது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணை உங்களை உதாசீனப்படுத்துவதன் காரணமாக உங்களுக்கு எரிச்சல் ஏற்படும். உங்கள் எரிச்சல் உணர்வுகளை அவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. அதனால் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் பயனுள்ள வகையில் அதை பயன்படுத்த முடியாது.

கண்கள் மற்றும் தொண்டை எரிச்சல்கள் போன்ற பாதிப்புகளுக்கு இன்று சிகிச்சை தேவைப்படலாம்.


ரிஷபம்

உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.செயல்களில் தாமதம் நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டியது அவசியம்

உங்களுக்கும் உங்கள் துணையாருக்கும் இடையேயான குறைவான புரிந்துணர்வு காரணமாக அவரிடம் உங்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

தேவையற்ற கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம். உங்களிடம் குறைந்த பணமே காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மனஅழுத்தம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். நீங்கள் மிகவும் சோர்வாகவும் அசௌகரியமாகவும் உணர்வீர்கள்.


மிதுனம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது அவசியம் மற்றும் நல்லது.

உங்களிடம் காணப்படும் சிறப்பான திறமை காரணமாக உங்கள் பணிகளை நன்றாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்ல புரிந்துணர்வையும் அனுசரனையான அணுகுமுறையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படாது. செலவினங்களையும் எதிர்கொள்ள நேரலாம்.

இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.


கடகம்

உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக செயல்களை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் நலனுக்கான பயனுள்ள முடிவுகளை விரைந்து எடுப்பதற்கு உங்கள் மனமும் விரைவாகச் செயல்படும்.

இன்று சிறந்த வெற்றி கிடைக்கும். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பதவி உயர்வு என்ற பெயரில் அங்கீகாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனது உணர்ச்சிக்கு ஆட்பட்ட நிலையில் இருக்கும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அது உங்கள் உறவை வளர்க்க உதவும்.

இன்று வளர்ச்சி காணப்படும். வசதியுடன் இருப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.


சிம்மம்

உங்கள்அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழலில் சில ஏமாற்றங்களை உணர்வீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு குறைந்து காணப்படும். அதனால் பணி வளர்ச்சி பாதிக்கப்படும்.

நீங்கள்இன்று மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடத்தில் அந்த உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் அவருடன் உங்களுக்கு நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

செலவுகளும் பொறுப்புகளும் அதிகரிக்கும் காரணத்தால் இன்று கணிசமான தொகை சேமிக்க இயலாது.

நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள்.


கன்னி

ஆன்மீகச் செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சி காணலாம். முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்கு தேவையான முக்கியமான விஷயங்களில் ஒன்று கடவுள் வழிபாடு.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று உங்கள் துணையுடன் ஒரு இணக்கமான உறவை பராமரிக்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரலாம்.

குறைந்த அளவு பணமே காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

ஒவ்வாமை காரணமாக சளி சம்பந்தமான பிரச்சனைகளால் பாதிக்கப்படுவீர்கள்.


துலாம்

நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். நேர்மறையான அணுகுமுறை அவசியம். தியானம் மற்றும் பிரார்த்தனை உங்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும்.

இன்று முடிக்க வேண்டிய பணியில் உங்கள் சக பணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். அதனால் பணிகள் நிலுவையில் இருக்கும். சகபணியாளர்கள் உங்களை நிந்திப்பார்கள்.

உங்கள் துணையுடன் கவனமாக பழக வேண்டும். உங்கள் இருவருக்கும் இடையே தொடர்பாடலில் சில குறைபாடுகள் காணப்படும்.

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக அமையாது. பண இழப்புகள் காரணமாக உங்கள் கையிருப்பு கரையும் வாய்ப்பு காணப்படுகின்றது.

காதுவலி ஏற்படலாம். உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.


விருச்சிகம்

இன்றைய நாள் சமநிலையுடன் காணப்படும். நீங்கள் நினைத்ததை அடைவதற்கு குறைந்த அளவு முயற்சியே போதுமானதாக இருக்கும். உங்களுடைய இலக்குகளும் இலட்சியங்களும் சற்று இலகுவாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணியாற்றும் விதத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சகபணியாளர்களுக்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாக திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று மிகவும் கலகலப்பாக காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான எண்ணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிர்ஷ்டத்தின் சாயல் காணப்படும். அதன் காரணமாக கணிசமான தொகையை தக்க வைத்துக் கொள்ள வழி கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -07.09.2023




இன்றைய நாள் அபாரமான நாளாக இருக்கும். உங்கள் தொடர்பாடல் திறமை மூலமாக உங்கள் பிரியமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும் திறம்பட செயலாற்ற கால அட்டவணையை பின்பற்ற வேண்டும்.

இன்று மாலை உங்கள் துணையை சந்திப்பீர்கள். இது உங்கள் இருவருக்கும் ஒரு நல்ல சந்திப்பாக அமையும். மகிழ்ச்சி தரும் வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை திருப்திபடுத்துவீர்கள்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். நிதிநிலையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் காணப்படாது. ஆடை ஆபரணம், ஆடம்பரப் பொருள்கள் போன்ற பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




எதிர்மறை எண்ணங்கள் தோன்றலாம். அதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் வெற்றி காண்பது கடினம்.

பணியில் அதிக பொறுப்புகளை சுமக்க நேரிடும் பணியில் கவனம் செலுத்த வேண்டும். உங்களின் மேலான கவனம் பணியில் முன்னேறிச்செல்ல வழிகாட்டும்.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் காணப்படுவீர்கள். அதனை உங்கள் அணுகுமுறையிலும் வெளிப்படுத்துவீர்கள். அதனால் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படலாம்.

பணவளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும். பணஇழப்புகள் ஏற்படலாம்.

தொண்டையில் தொற்று ஏற்படலாம். வெந்நீர் குடிப்பதன் மூலம் உபாதைகள் குறையலாம்.




எதையோ இழந்தது போன்று உணர்வீர்கள். சோர்வுடன் காணப்படுவீர்கள். அதனை தவிர்த்து சுறுசுறுப்புடனும் நேர்மறை எண்ணத்துடனும் இருக்க முயலுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியில் உங்களின் வேலையின் தரம் குறைந்து காணப்படுவதன் காரணமாக உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளின் கேள்விக்கு ஆளாகும்.

உங்கள் துணையுடன் பேசும்பொழுது கோபமான உணர்ச்சி காணப்படும். நல்லுறவை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்து எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளப் பழகுங்கள்.

கூடுதல் சுமைகள் காரணமாக இன்று பணத்தை அதிக அளவில் செலவு செய்ய நேரிடும்.

உங்கள் மனதில் தோன்றும் அமைதியற்ற உணர்வுகளின் காரணமாய் அசெகரியங்களை உணர்வீர்கள்.




இன்றைய நாள் துடிப்புடன் காணப்படும். வெற்றிக்கான முயற்சி செய்வீர்கள். திடமான சிந்தனையும் செயலாக்கமும் காணப்படும். வெற்றிக்கான உங்கள் முயற்சி ஜெயிக்கும்.

உங்கள் பணியில் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது.எனவே பணியில் கவனமாக இருப்பது நல்லது.

உங்கள் துணையுடன் தார்மீக நெறிமுறைகளை கையாள்வீர்கள். இதனால் அவரை நீங்கள் நன்றாக புரிந்துகொள்வீர்கள்.

உங்களிடமுள்ள பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள். நல்ல முதலீட்டு ஆலோசனைகளில் பங்குபெறுவீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் இலேசாக எடுத்துக் கொள்வீர்கள்.







# உதயநிதி ஸ்டாலினின் கருத்துக்கு உரிய பதில் அளிப்பது அவசியம்!

## அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை



தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் சனாதனம் குறித்த கருத்துக்கு 'உரிய பதில்' அளிப்பது அவசியம் என்று மத்திய அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார்.

தலைநகர் டில்லியில் ஜி 20 உச்சி மாநாடு நடைபெற உள்ள நிலையில், அது தொடர்பாக மத்திய அமைச்சர்கள் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில்தான் சனாதன சர்ச்சை குறித்து பிரதமர் மோடி முதல்முறையாக பேசியுள்ளார்.

மத்திய அமைச்சர்களிடம் அவர் கூறுகையில், இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகளுக்கு உரிய பதில் அளிக்க வேண்டும். எனினும், வரலாறு பற்றி யாரும் பேச வேண்டாம். அரசியல மைப்பை ஒட்டிய உண்மைகளில் உறுதியாக இருங்கள். இது குறித்த தற்கால சூழல்கள் பேசுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், இந்தியா - பாரத் சர்ச்சை குறித்து யாரும் பேச வேண்டாம். இதுகுறித்து அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் பேச வேண்டும் என்றும் அவர் அறிவுறுத் தியுள்ளார்

இதேவேளை, கடந்த சனிக்கிழமை சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 'சனாதனத்தை எதிர்ப்பதை விட ஒழிப்பதே, நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்' என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு இந்தியா முழுவதும் பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்பு எழுந்துள்ளது. உதயநிதியின் கருத்து இந்துக்களின் மீதான கடும் விமர்சனமாக வட மாநிலங்களில் உருவெடுத்து வருகிறது. அவரின் கருத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கண்டித்திருந்தார். சனாதனம் மீதான விமர்சனத்தை வழக்குப் பதிவு செய்து உச்ச நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் எனவும் பா.ஜ.கவினர் வலியுறுத்தி உள்ளனர்.

உதயநிதியின் சனாதனம் குறித்த கருத்தை வைத்து இண்டியா கூட்டணி மீது பா.ஜ.க. தாக்குதல் தொடுத்தது. இதுகுறித்து பேசிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத்சிங், இந்த விஷயத்தில் காங்கிரஸ் தலைவர்களான சோனியா காந்தி, ராகுல் காந்தி, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் ஆகியோர் அமைதி காப்பது ஏன்?" எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

இண்டியா கூட்டணிக் கட்சிகள் சனாதனம் மீதான விமர்சனத்துக்கு மன்னிப்பு கோர வேண்டும் எனவும், இல்லை எனில் அவர்களை இந்த நாடு மன்னிக்காது என்றும் தெரிவித்தி ருந்தார்.

## அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு இயக்குநர் வெற்றிமாறன் ஆதரவு!



சமத்துவத்தை மறுக்கும் எதுவாக இருந்தாலும் அதனை வீழ்த்த வேண்டும் என்றும் அந்த வகையில் அதைப்பற்றி பேசியிருக்கும் உதயநிதியின் கருத்துக்கு நான் துணை நிற்கிறேன் எனவும் இயக்குநர் வெற்றிமாறன் தெரிவித் துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற தமிழ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வெற்றி மாறன் செய்தியாளர்களிடம் பேசுகையில், சமத்துவம் என்பது பிறப்புரிமை. அதில் கேள்விகள் இல்லை.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது அடிப்படை பிறப் புரிமை. அதனை மறுக்கும் எதுவாக இருந்தாலும், அது எந்த ரூபத்தில் இருந்தாலும் அதனை எதிர்ப்பதும், வீழ்த்துவதும் சுதந்திர மனிதர்களாக, விடுதலை விரும்பும் மனிதர்களாக நம் அனைவரின் கடமை. அதைப்பற்றி பேசியிருக்கும் உதயநிதிக்கு இந்த உணர்வு இருக்கும் அனைவரும் உடன் நிற்க வேண்டும் என்பது என் விருப்பம். நான் அவருக்கு ஆதரவாக நிற்கிறேன். அவர் சொன்ன கருத்துக்கு என்னுடைய ஆதரவை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு இந்தியா என்கிற பெயரை போதுமானதாக உள்ளது. சரியானதாகவும் உள்ளது. தேசிய விருதுகள் குறித்து எனக்கு வேறு விதமான கருத்துகள் உண்டு.

ஒரு படத்தை நாம் ஒருவித தேர்வுக்கு அனுப்புகிறோம் என்றாலே அந்த தேர்வு குழுவின் முடிவுக்கு நான் ஒப்புகொள்கிறேன் என்ற அடிப்படையில் தான் அனுப்புகிறேன். அப்படி நாம் படத்தை அனுப்பும்போதே அதன் முடிவுக்கு உடன்பட்டு தான் அனுப்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## வெளிநாடுகளுக்கு ஒரு வார காலம் ராகுல் சுற்றுப்பயணம்



காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி ஐரோப்பிய நாடுகள் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார்.

ஐரோப்பிய நாடுகளில் ஒருவார கால சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ராகுல் காந்தி ஐரோப்பிய யூனியன் வழக்கறிஞர்கள், மாணவர்கள், ஐரோப்பிய வாழ் இந்தியர்கள் ஆகியோரை சந்தித்துப் பேசவுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் 8 ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ராகுல் காந்தி உரையாற்றவுள்ளார்.

அத்துடன், பிரான்ஸில் இருந்து நோர்வே செல்லும் அவர், அங்கு ஆஸ்லோவில் நடைபெறும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தோருடன் ஆலோசனை நடத்துகிறார்.

# வாக்னர் கூலிப்படையை பயங்கரவாத குழுவாக அறிவிப்பதற்கு பிரித்தானியா அரசாங்கம் திட்டம்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் மறைமுக கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் வாக்னர் கூலிப்படையை தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமாக அறிவிப்பதற்கு பிரித்தானிய அரசு திட்டமிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன், சிரியா, மாலி போன்ற நாடுகளில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வாக்னர் கூலிப்படை மீது கொடூர கொலைகள், கைதிகளை சித்திரவதை செய்தல், சூறையாடுதல் போன்ற பல குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன.

இந்த நிலையில், உலக அமைதிக்கு வாக்னர் கூலிப்படையால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என குற்றம்சாட்டியுள்ள பிரித்தானிய உள்துறை அமைச்சர் சுயெல்லா பிரேவர்மேன், அதனை தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்போகிறோம் என தெரிவித்துள்ளார்.

தற்போது ஹமாஸ் மற்றும் போகோ ஹராம் போன்ற அமைப்புகள் போன்று, பிரித்தானியாவில் தடைசெய்யப்பட்ட குழுக்களின் பட்டியலில் வாக்னர் கூலிப்படையும் இணைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, வாக்னர் கூலிப்படையில் இனி உறுப்பினராக இருப்பது அல்லது ஆதரவளிப்பது சட்டவிரோதமானது என்றும், அதனை மீறுபவர்களுக்கு 14 ஆண்டுகள் வரையில் சிறை தனடனை அல்லது 5 ஆயிரம் பவுண்டுகள் அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஜூன் மாதம், புடினுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் கூலிப்படையின் தலைவர் பிரிகோஷி ின் அண்மையில் மர்மமான முறையில் விமான விபத்தில் உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க பிரதிநிதி உக்ரைனுக்கு விஜயம்!



அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அண்டனி பிளிங்கன் நேற்று உக்ரைனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவரது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியுள்ள போர்க்கால உதவியின் புதிய தொகுப்பை அறிவிப்பார் என்று வெளியுறவுத்துறை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ் கியையும் அவர் சந்திக்க உள்ளார்.

கடந்த ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் ரஷ்யா மீதான எதிர்த்தாக்குதல் தொடங்கியதில் இருந்து கியேவுக்குச் சென்ற முதல் அமெரிக்க உயர் அதிகாரி அன்டனி பிளிங்கன் ஆவார்.

தமது பங்காளிகள் ஒரு வலுவான பொருளாதாரம், வலுவான ஜனநாய கத்தை கட்டியெழுப்புவதற்கும் அதன் போது அவர்களுடன் தொடர்ந்து பணியாற் றுவதிலும் உறுதியாக உள்ளதாக் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் அண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் இதுவரை 43 பில்லியன் டொலருக்கும் அதிகமான ஆயுதங்கள் மற்றும் பிற இராணுவ உதவிகளைஉக்ரைனுக்குவழங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜி-20 இல் பைடன் பங்கேற்பதில் சிக்கல்!



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நாளை இந்தியா செல்கிறார் என கூறப்பட்ட நிலையில் அவர் ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஜோ பைடனுக்கும், அவரது மனைவி ஜில் பைடனுக்கும் எடுக்கப்பட்ட கொவிட் பரிசோதனையில் ஜில் பைடனுக்கு தொற்று உறுதியாகியுள்ளது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஜி-20 அமைப்பின் தற்போதைய தலைவராக இந்தியா செயல்பட்டு வருவதால் இந்த ஆண்டுக்கான உச்சி மாநாடு டில்லியில் எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஜின்பிங் உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

இதை ஏற்று பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க இசைந்துள்ளனர்.

ஜோ பைடனுக்கு கொவிட் தொற்று இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும்ம் நாள்தோறும் அவருக்கு பரிசோதனை நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் அவர் டெல்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதில் சிக்கல் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களோ விடுதலை அமைப்பினர்களோ பௌத்த மதத்திற்கு எதிரானவர்களே அல்லர்!

## நாடாளுமன்றத்தில் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு

தமிழ் மக்களோ, தமிழ் மக்களின் விடுதலை அமைப்பினர்களோ பௌத்த மதத்திற்கு எதிரானவர்கள் அல்லர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே சார்ள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோர் அரசாங்கத்தின் இராணுவப் புலனாய்வு, ஒட்டுக் குழுக்களின் செயற்பாட்டாலே கொல்லப்பட்டனர்.

ஆனால், இன்று வரை யார் செய்தார்கள், ஏன் செய்தார்கள் என்ற விடயங்களை யாவருமறிந்தும் சாட்சிகள் சான்றுகளாக நிரூபிக்கப்படவில்லை. குறிப்பாக ஆட்சியாளர்கள் இவை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளாததனால்தான் இவை நிரூபிக்கப்படாமல் உள்ளன.

எனவே, இவ்விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையை நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்த விடயத்தை வரவேற்கின்றேன்.

2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின் கோட்டபாய ராஜபக்ஷ வடக்கு, கிழக்கில் தமிழர் மக்களை இல்லாதொழிக்கவும் பௌத்த மயமாக்கலை



ஏற்படுத்துவதற்காகவும் நிர்வாக ரீதியாகவும் சட்டரீதியாகவும் பல முயற்சிளை மேற்கொண்டார்.

இலங்கையின் பூர்வீகக்குடிகள் தமிழர்கள் என்பதற்கான சான்றுகளை தொல்பொருள் திணைக்களத்தினூடாக அழித்தொழித்து, பௌத்த சான்றுகளாக சட்டரீதியாக நிறுவுவதற்காக தொல்பொருள் திணைக்களத்திற்கென கிழக்கு மாகாணத்தில் செயலணியை நிறுவினார்.

அதேவேளை 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதலூடாக ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக சிங்கள மக்களை ஏமாற்றியதைப் போல் 1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டதிலிருந்து இன்று வரை தமிழர்களை அடக்க வேண்டுமென அரசியல் இலாபங்களுக்காகப் பொய்களைப் பரப்பி தமிழர்களுக்கு எதிராக பல நாடுகளிலிருந்து பணத்தைப் பெற்று போர் தொடுத்ததன் விளைவாக இன்று நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

தனிச்சிங்களம் கொண்டுவரப்பட்டதன் பிற்பாடு பொலன்னறுவை, காலி போன்ற இடங்களில் இந்து குருமார் தாக்கப்பட்டனர். அதன் பின் தமிழர்களின் பல கலைக்கழக அனுமதியைத் தடுப்பதற்காக புதிதாக சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதன் விளைவாகத்தான் தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள்.

குருந்தூர்மலை தொடர்பாக ஜனாதிபதி, நீதியமைச்சர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் பல தடவைகள் கலந்துரையாடியும் இன்று வரை தீர்வுகள் கிடைக்கவில்லை. எனவே, சான்றுகள் அடிப்படையில் சர்வதேச ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனின் எமது இன மற்றும் மத சான்றுகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றை விட 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் தொல்லியற் திணைக்களத்தால் நிலங்கள் பறிபோகும் நிலையிலிருந்தபோது அமைச்சராக இருந்தவர் தற்போது எதிர்க்கட்சித் தலைவராக உள்ளார்.

எனவே குருந்தூர்மலை தொடர்பான விடயங்களை தமிழ் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதுடன், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டும்.– என்றார்.

# மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க முடிவு!

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட 11 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக மட்டத்தில் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்படும் என ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடுகளில் சிலவற்றை வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளமை



ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் பொதுச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தொழில் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அந்த முறைப்பாடுகள் உரிய நிறுவனங்களால் சரியான முறையில் விசாரணை செய்யப்படுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிக்கப்படுகிறது எனவும் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

கிடைத்துள்ள அனைத்து முறைப்பாடுகளையும் உடனடியாக விசாரணை செய்வதன் மூலம், மக்களுக்கான நீதியை நிலைநாட்ட முடியும் என சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்துள்ளார்.

# மெறூன்ஸ் பரவசப் பெருவிழா






(பாலமுனை நிருபர்)

பாலமுனை மெறூன்ஸ் விளையாட் டுக் கழகத்தின் 33 ஆவது வருட நிறைவை சிறப்பிக்கும் முகமாக 'மெறூன்ஸ் பரவசப் பெருவிழா' எனும் தொனிப் பொருளில் நிகழ்வுகள் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

மெறூன்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவர் எம்.ஏ.அபுஸாலிஹ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எ.கே.எம்.இப்னு அஸார், அக்கரைப்பற்று பதில் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எஸ்.எம்.சதாத் ஆகியோர் கௌரவ விருந்தினர்க ளாகக் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், உதவி தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனீபா ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர்கள், கழகத் தலைவர்கள், கழகத்தின் முன்னாள் தலைவர்கள் மற்றும் பிரதான இணை அனுசரணையாளர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி பாலமுனை மண்ணுக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் மாணவர்கள், மகப்பேற்று வைத்தியர் ஏ.எல்.சுதைஸ் அஹமட், பொறியியலா ளர் வை.எல்.கியாஸ்தீன், யூனானி வைத்திய நிபுணர் எம்.பி.நழீம் உட்பட உலமாக்கள், ஹாபிழ்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

# ஈஸ்டன் கிங்ஸ் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள்

(றியாஸ் ஆதம் )

செக்டோ ஸ்ரீலங்கா நிறுவனத்தால் அட்டாளைச்சேனை ஈஸ்டன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (05) செக்டோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் மற்றும் நிறுவனத்தின் ஆலோசகரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.எல்.முனாஸ் ஆகியோர், ஈஸ்டன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எல்.அஸ்மில், முகாமையாளர் ஏ.ஜே.அப்பாஸ் ஆகியோரிடம் விளையாட்டு



உபகரணங்களை கையளித்தனர்.

இதன் போது கழகத்தின் செயலாளர் ஜே.சஜித், உப தலைவர் பீ.பஸ்லி, விளையாட்டுக்குழு தலைவர் ஏ.அஸ்வர் உள்ளிட்ட கழகத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.